**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**முன்னிலை: திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 22-ம் நாள் செவ்வாய்கிழமை**
**EA.No.13/2018**
**in**
**EP.No.34/2017**
**OS.No.28/2004**

முகமது என்பவருக்காக
மணிவண்ணன், ..... மனுதாரர்/3-ம் எதிர்மனுதாரர்

/எதிர்/

பொது மேலாளர்,
பி.பி.டி.சி நிர்வாகம்,
முடீஸ் டவுண் அஞ்சல், வால்பாறை T.K. ..... எதிர்மனுதாரர் / மனுதாரர்

இம்மனுவானது கடந்த 01.07.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ 3-ம் எதிர்மனுதாரருக்காக திரு.மணிவண்ணன் என்பவர் தானே நேரடியாக முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. பால்பாண்டி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரை பரிசீலனையிலிருந்து, இம்மனுவில் இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும்...

## உத்தரவு

1. நிறைவேறுதல் மனுவில் 3-ம் எதிர்மனுதாரர் முகமது என்பவருக்காக மணிவண்ணன் என்பவர் முகவராக செயல்பட அனுமதி கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் விதி 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:-**

2.1 . இம்மனுவில் மனுதாரர் நிறைவேறுதல் மனுவில், எதிர்மனுதாரர் அவர்களால் அதிகார பத்திரத்தின் வாயிலாக அதிகாரம் பெற்றுள்ள அதிகார முகவர் ஆவார். வாதி நிர்வாகம் மேற்படி முடீஸ் பஜாரில் 22 குடும்பங்களை காலி செய்ய வேண்டி விளம்புகை பரிகாரம், சுவாதினம் மற்றும் இழப்பீடு வேண்டி 10 வழக்குகளும், அத்துமீறி நுழைந்து கொண்டதால் சுவாதினம் மற்றும் இழப்பீடு வேண்டி 12 வழக்குகளும் தாக்கல்

செய்யப்பட்டது. இந்த முகவர் மணிவண்ணன் மீது OS. 517/ 2000-ம், OS.176/2012 ஆகிய வழக்குகள் கடந்த 17 ஆண்டுகளாக விசாரணையில் இருந்து வருகிறது. பாதிக்கப்பட்ட 22 நபர்களும் இந்த முகவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு அதன் பேரில் கடந்த 17 ஆண்டுகளாக இது தொடர்பாக வழக்கறிஞரை சந்திப்பது, அரசுக்கு மனுக்கள் செய்வது, தமது சொந்த வழக்கில் பார்டியின் பர்சனாக அசல் வழக்கை நடந்தி வருகிறார். இது தொடர்புடைய OS.53/2007 வழக்கில் 3-ம் பிரதிவாதி மாரியம்மாள் வழங்கிய அதிகார பத்திரத்தின் வாயிலாக வால்பாறை கீழமை நீதிமன்றத்தில் C.P.C ஆர்டர் 3 ரூல் 2-ல் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனுவை கீழமை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததின் பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தில் C.R.P எண் 1343/2013-ல் பிரதிவாதியின் முகவராக செயல்படலாம் என்று உத்தரவு செய்யப்பட்டுள்ளது.

2.2. தாவா சொத்துக்கள் அடங்கிய ஆனைமலை குன்றுகள், வால்பாறை தாலுக்கா 35,000 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டது. இதில் சுமார் 32,000 ஏக்கர் நிலங்கள் பிரிட்டீஸ் அரசாங்கத்தால் 10.5.1920-ம் ஆண்டு, பல தனியார் தேயிலை நிறுவனங்களுக்கு வனக்குத்தகை அசைண்மெண்ட் மற்றும் ரயாத்து வரி ஆகிய தலயங்கத்தில் விதிகளுக்கு உட்பட்டு நிலங்களை அரசாங்கம் குத்தகைக்கு கொடுத்துள்ளது. இது தொடர்பாக அரசுக்கு மனுக்கள் செய்தும், அதன் பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றும், சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இந்த மனுதாரர், வாதி தாவா சொத்துக்கள் அடங்கிய நிலங்களுடன் தமக்கு கொடுத்துள்ள குத்தகை நிலங்கள் 5851 ஏக்கர் முழு உரிமையாளர் என்று விளம்புகை பரிகாரம் வேண்டி தாவா தாக்கல் செய்து, அசல் வழக்கில் வாதி நிறுவனத்திற்கு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கப்பட்டு அதன் பேரில் இந்த எதிர்மனுதாரர் வழங்கிய அதிகார பத்திரத்தின் பேரில் மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் இந்த முகவரால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அதிகார பத்திரத்தின் நோட்டரி வழக்கறிஞர் சான்றிட்ட நகலை இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

2.3. கடந்த 1809-ம் ஆண்டு முதல் மேற்படி நிலங்கள் தொடர்பான நிலைபாடுகள் குறித்து இந்த முகவர் நன்கு அறிந்து இருப்பதாலும், மேல்முறையீடு நீதிமன்றத்தில் AS.39/2006 மற்றும் AS.07/2007 ஆகிய வழக்குகளில் மேல்முறையீடு வாதிகளின் முகவராக இருந்து நல்ல தீர்ப்புகளை பெற்றுள்ள அனுபவங்களினாலும், இந்த மேல்முறையீடு வாதியின் தாவா சொத்துக்கள் பற்றிய முழு விபரம் நன்கு தெரிந்திருப்பதினாலும், கடந்த 17 ஆண்டுகளாக மேல்முறையீடு வாதியின் வழக்கு காரியங்களை முன்னின்று செயல்படுத்தி வந்ததினாலும், மேற்படி எதிர்மனுதாரர் இந்த முகவருக்கு 19.09.2016-ம் நாள் ஒரு அதிகார பத்திரத்தின் வாயிலாக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளதை இந்த நிறைவேற்றுதல் மனுவில் ஆஜராகி செயல்பட தனக்கு வழங்கிய அதிகார பத்திரத்தின் வாயிலாக அதிகாரம் வழங்க வேண்டியும், எதிர்மனுதாரர் முகவராக இருந்து கொண்டு மனு தாக்கல் செய்யவும், மனுதாரர் வாதியின் மனுக்களுக்கு எதிர் மனுதாக்கல் செய்யவும், தேவைப்படின் மனுதாரரை நீதிமன்றத்தில் விசாரிக்கவும், குறுக்கு விசாரணை செய்யவும், மனு தொடர்பாக வாதுரை செய்தும், எதிர்மனுதாரர் பக்கமாக முழுமையாக நீதிமன்றத்தில் இருந்து செயல்பட அனுமதிக்க வேண்டுவது நியாயமாகியும், அவசியமாகியும் உள்ளது, இல்லாதபட்சம் நிறைவேறுதல் மனுவில் எதிர்மனுதாரருக்கும், முகவருக்கும் பொருளால் ஈடு செய்ய முடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு விடும்.

2.4. மாண்பமை உச்ச நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு 6790/2003 வழக்கில் ஆர்டர் 3 ரூல் 1 மற்றும் 2-ன் கீழ் அதிகார முகவராக வழக்குகளில் ஆஜர் ஆகவும், எதிர்மனுதாரர் அதிகார பத்திரம் கொடுத்துவிட்டு வெளி நாட்டிற்கு பணிக்கு சென்றுவிட்டதாகவும், ஆகையால், 24.08.2017-ம் நாள் நோட்டரி வழக்கறிஞர் முன்னாக தயாரிக்கப்பட்ட அதிகார பத்திரத்தில் உள்ள காரியங்களையும் சீர் தூக்கி பார்த்து, அதில் இந்த முகவருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின் பேரில் எதிர்மனுதாரருக்கு நிறைவேறுதல் மனுவில் நீதிமன்றத்தில் தோன்றி முகவராக செயல்பட அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம்:-**

3.1. மனுதாரர் சார்பில் அதிகார முகவர் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கு ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. அதிகார முகவர் தாக்கல் செய்துள்ள மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகார பத்திரம் என்பது அசல் அதிகார பத்திரத்தின் நகல் எடுக்கப்பட்டு, அதன் நகல் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக அசல் ஆவணம் வேறு சட்டப்படியான அமைப்புகளில் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அதன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யலாம். ஆனால், இம்மனுவுடன் அதிகார பத்திரத்தின் நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் சார்பில் தாக்கல் செய்துள்ள அதிகார பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சட்டப்படிக்கு செல்லத்தக்கது அல்ல. ஏனென்றால், அதிகார பத்திரத்தில் எந்த இடத்திலும் நிறைவேற்றுகை மனுவில் ஆஜராவது குறித்து மனுதாரர் அதிகார முகவருக்கு எந்த விதத்திலும் அதிகாரம் வழங்குவதற்கான சங்கதிகள் இல்லை.

3.2. இந்நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள அசல் வழக்கு எண் மட்டுமே அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, அசல் வழக்கு முடிந்து நிறைவேற்றுகை மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்து அதிகார பத்திரத்தில் குறிப்பிடாத நிலையில் மனு ஏற்றுக்கொள்ளத்தக்கது கிடையாது. அசல் வழக்கில் மனுதாரர் வழக்கறிஞர் நியமித்து ஆஜராகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மனுவிலும், அதிகார பத்திரத்திலும் அதிகார முகவர் வழக்கு நடத்துவதற்கும், சாட்சியங்கள் விசாரிப்பதற்கும், சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட நிலையான கருத்துக்களின் படி அதிகாரம் முகவர் என்பவர் வழக்கின் தரப்பினர் குறித்தும், தாவா குறித்தும், தாவா சொத்து குறித்தும் முழுமையாக அறிந்துள்ள நிலையில் மட்டுமே அதிகாரம் முகவர் என்பவர் தாவாக்களில் சாட்சியம் அளிப்பதற்கு தகுதியுடையவர் ஆகிறார்.

3.3. இம்மனுவை பொறுத்தவரை தாவா குறித்தும், தாவா சொத்தும் குறித்தும் எதுவும் விளக்கப்படாத நிலையில் அதிகாரம் முகவர் வழக்கறிஞரை போன்று வழக்கு நடத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கூறுவது சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளத்தக்கது கிடையாது. அதிகாரம் முகவர் மற்றும் தரப்பினரின் உறவு நிலை குறித்து அதிகார பத்திரத்திலும், மனுவிலும் விளக்கப்படவேண்டியது அவசியம். ஆனால் இம்மனுவிலும், அதிகார பத்திரத்திலும் அவ்வாறான எந்த சங்கதிகளும் கிடையாது. 1961-ம் வருடத்திய வழங்கறிஞர் சட்டம் பிரிவு 29-ன் படி அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே வழக்கறிஞர்களாக பணியாற்றமுடியும். மேற்படி சட்டம் பிரிவு 33-ன் படி வழக்குகளில் ஆஜராகி பணிபுரிவதற்கு உரிமை உள்ளது எனவும், " டி. சொர்ணம் எதிர் சென்னை மாகாணம் - 1969 (1) MKJ 207" என்ற வழக்கில் தீர்வத்தின் படி அதிகார முகவர் என்பவர் வழக்கறிஞர் என்ற நிலையில் பணியாற்ற இயலாது என்று கூறப்பட்டுள்ளது. சிபிசி ஆர்டர் 3 ரூல் 1-ன் படி அங்கீகரிக்கப்பட்ட முகவர் தரப்பினர் சார்பில் ஆஜராவதற்கும், சாட்சியம் அளிப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட விதிப்படி அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் வாதிடுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. நீதிமன்றங்களில் ஆஜராகி வாதிடுவதற்கும், சாட்சியங்களை விசாரிப்பதற்கும், குறுக்கு விசாரணை செய்வது போன்ற சட்டங்களில் சொல்லப்பட்டுள்ள விளக்கங்கள் சிபிசி ஆர்டர் 3 ரூல் 1-ல் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆஜராகுதல், தாக்கல் செய்தல், தரப்பினருக்காக செயல்படுதல் போன்ற விளக்கங்கள் பொருந்ததாது.

3.4. " கிருஷ்ணம்மாள் எதிர் பாலசுப்பரமணியன் (1937) 2 MKJ 552 ILR (1938) மெட்ராஸ் " 12 என்ற வழக்கின் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பின் படி முகவர் என்பவர் அதிகார பத்திரத்தின் படி ஆஜராவதை தவிர்த்து வழக்கறிஞர் பணிகளை செய்ய இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜானகி எதிர் இண்டு சிந் வங்கி லிட் " 2005 (2), SCC 217 - 2005 (3) - சி.டி. சி 128 (SC) அதிகார முகவர் அதிகாரம் அளித்தவற்காக சாட்சியம் அளிக்கலாம் ஆனால் அதிகாரம் அளித்தவருக்கு மட்டுமே தெரிந்த சங்கதிகளை சாட்சியமாக அளிக்க இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்ட நிலைகளின்

படியும், இம்மனுவில் தாக்கல் செய்துள்ள அதிகார பத்திரம், அசல் அதிகார பத்திரத்தின் நகல் என்ற நிலையில் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. அதிகார பத்திரத்தில் நிறைவேற்றுகை மனுவில் ஆஜராவது குறித்து அதிகார முகவருக்கு அதிகாரம் அளிக்கப்படாத நிலையில் இம்மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது.

**4. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவானது அசல் நிறைவேறுதல் மனு 34/2017-ல் 3-ம் எதிர்மனுதாரரான முகமது என்பவருக்காக 19.09.2016-ம் தேதியிட்ட அதிகார பத்திரத்தின் படி இந்த நிறைவேறுதல் மனுவில் செயல்பட அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் 19.09.2016-ம் தேதிய அதிகார அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டள்ளதாக சொல்லப்பட்டிருந்தாலும், இம்மனுவுடன் புகைப்பட நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிகார அதிகார பத்திரத்தின் அசலையோ அல்லது சான்றிட்ட நகலையோ தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் 29.01.2025-ம் தேதியில் கோரியிருந்தது. 29.01.2025-ம் தேதி முதல் 27.02.2025, 24.03.2025, 15.04.2025, 23.06.2025, 01.07.2025-ம் தேதிகள் வரை போதிய வாய்ப்பு அளித்தும் அதிகார அதிகார பத்திரத்தின் அசலோ, சான்றிட்ட நகலோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு அதிகார அதிகார பத்திரத்தின் அசலோ, சான்றிட்ட நகலோ தாக்கல் செய்யாததற்கு எவ்வித காரணமும், மனுதாரர் தரப்பில் விளக்கப்படவில்லை.

6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் C. R. P.No.3593, 3601, 3615 & 3624 of 2023 எண்களில் மணிவண்ணனை அதிகார முகவராக செயல்பட அனுமதி அளித்துள்ளதாக கூறி மேற்படி உத்தரவின் புகைப்பட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் அசல் உத்தரவோ, இணைய வழி உத்தரவோ தாக்கல்

செய்யப்படவில்லை. மேற்படி, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற C. R. P.No.3593, 3601, 3615 & 3624 of 2023 and C. M. P. Nos. 22509, 22538, 22629 & 22701 of 2023 -ல் 09.10.2023-ம் தேதிய உத்தரவின் புகைப்பட நகலில் இதனடியில் கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி, மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற C. R. P.No.3593, 3601, 3615 & 3624 of 2023 and C. M. P. Nos. 22509, 22538, 22629 & 22701 of 2023 -ல் 09.10.2023-ம் தேதிய உத்தரவை பார்வையிடும் போது,

பாரா 3.....................................

" However, the learned counsel for respondent would argue that as per the recitals of power of attorney, the power was given as per Clause 10 of the power of attorney to conduct the proceedings, which reads as follows:-

" மேலும், எனது வியாபார ரீதியாக அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டி இருப்பதால் எனது வழக்கில் O.S.No. 109/2001-ல் மேற்படி லேட் முத்துசாமி மகன் மணிவண்ணன் அவர்கள் எனது பவர் ஏஜெண்டாக இருந்து செயல்பட இந்த பவர் ஆப் அட்டர்னி வாயிலாக சம்மதிக்கிறேன். எனது வழக்கில் ஆஜராகி எனது சார்பாக அபிடவிட், பெட்டிசன் மற்றும் பதிலுரை தாக்கல் செய்யவும் அதன் பொருட்டு வாதுரைக்கவும் குறுக்கு விசாரணை செய்யவும் மற்றும் மேல்முறையீடுகள் ஏற்படுமெனில் மேல் முறையீட்டு நடவடிக்கை எடுக்கவும் முழு அதிகாரத்தையும் வழங்குகின்றேன்."

Therefore, the power was given to Manivannan only to conduct the proceedings, to that extent, he can be permitted and not in respect of adducing any evidence.

4. Admittedly, the power of attorney was executed only for representing on behalf of appellant before the lower appellate court and if he wanted to adduce evidence, he has to file a separate power of attorney subject

to objections of plaintiff. Accordingly, these Civil Revision Petitions are allowed and the findings of the lower appellate judge in I.A.Nos. 29 of 2018, 26 of 2018, 58 of 2018 and 59 of 2018 in A.S.CFR.Nos. 12755 of 2018, 441 of 2018, 436 of 2018, and 12766 of 2018 are set aside. All the applications are ordered to be allowed only in respect of conducting the proceedings. No costs. Consequently, connected Civil Miscellaneous Petition are closed. " - என உள்ளது.

7. மேற்படி, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவிலிருந்து பொள்ளாச்சி சார்பு நீதிமன்ற I.A.Nos. 29 of 2018, 26 of 2018, 58 of 2018 and 59 of 2018 in A.S.CFR.Nos. 12755 of 2018, 441 of 2018, 436 of 2018, and 12766 of 2018 -ன் அசல் வழக்கு எண். 109 of 2001 வழக்கில் அதிகார முகவராக வழக்கு நடத்த அனுமதி கோரிய மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்பதை அறிய முடிகிறது. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி உத்தரவில், பொள்ளாச்சி சார்பு நீதிமன்ற O.S. No. 109 / 2001 வழக்கில் உள்ள மேற்கண்ட I.A.Nos. 29 of 2018, 26 of 2018, 58 of 2018 and 59 of 2018 in A.S.CFR.Nos. 12755 of 2018, 441 of 2018, 436 of 2018, and 12766 of 2018 -ல் மணிவண்ணன் அதிகார முகவராக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி உண்மை விபரங்களை மறைத்து மணிவண்ணன் தாக்கல் செய்துள்ள 01.07.2025 தேதியிட்ட குறிப்பாணையில் இந்நீதிமன்ற இந்த நிறைவேறுதல் மனு எண். 34/2017 மனுவிலும், இந்நிறைவேறுதல் மனுவின் 3-ம் எதிர்மனுதாரர் முகம்மதுவிற்காக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மேற்படி மணிவண்ணனை அதிகார முகவராக நியமிக்கப்பட்டுள்ளதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்தே 3-ம் எதிர்மனுதாரர்/அதிகார முகவர் இந்நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அணுகவில்லை என்பது தெளிவாகிறது.

8. மேலும், மனுவுடன் தாக்கல் செய்துள்ள 19.09.2016-ம் தேதியிட்ட அதிகார முகவர் ஆவணத்தின் புகைப்பட நகலை பார்வையிடும் போது,

" பாரா 11. மாண்புமிகு நீதிமன்றத்தில் எனக்காக மேற்படி மணிவண்ணன் அவர்களால் எடுக்கப்படும் அனைத்து காரியங்களும் அதனால் ஏற்படும் நன்மைகள் மற்றும் இழப்புகளும் என்னை கட்டுப்படுத்தும் எனவும் உறுதி அளிக்கின்றேன் ' ஆயையால் மேற்படி காரண காரிங்களுக்காக O.S.No.2/2004 என்ற வழக்கில் எனது பக்கமாக இருந்து முழுமையாக செயல்படவும் மாண்புமிகு நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் இந்த பவர் ஆப் அட்டார்னி வாயிலாக தக்க முடிவுகளை எடுக்க நான் முழு அதிகாரத்தையும் இன்று முதல் வழங்குகின்றேன். மேற்படி மணிவண்ணன் ஆகிய உங்களால் மேற்கொள்ளப்படும் O.S.No. 28/2004 என்று வழக்கில் ஏற்படும் தீர்ப்புகள் என்னை கட்டுப்படுத்தம் என்ற இதன் மூலம் உறுதி அளிக்கின்றேன்." - என உள்ளது.

9. மேற்படி அதிகார முகவர் ஆவணத்தின் புகைப்பட நகலில் O.S.No. 02/2004, O.S.No. 28/2004 என இரு வெவ்வேறு வழக்கு நடவடிக்கைகளில் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக உள்ளது. மேலும், நிறைவேறுதல் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்நீதிமன்ற அசல் வழக்கு எண். 28/2004-ன் தீர்ப்பாணை நகலை பார்வையிடும் போது, இந்த எதிர் மனுதாரர் / அசல் வழக்கு எண். 28/2004-ல் 3-ம் பிரதிவாதியான முகமது என்பவருக்காக வழக்கறிஞர் திருவாளர்.V.G.S அன்புநாகராஜன் அவர்கள் ஆஜராகியுள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள அதிகார முகவர் ஆவணத்தின் புகைப்பட நகலில் கண்டுள்ள சங்கதிகளின் படி அசல் வழக்கில் மணிவண்ணன் என்பவர் முகமது என்பவருக்காக அதிகாரம் பெற்ற முகவராக செயல்படவில்லை என்பதும் அறிய முடிகிறது.

10. மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாரருக்காக மணிவண்ணன் அதிகார முகவராக நியமிக்கப்பட்டுள்ளார் என பொய்யாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், அதிகார முகவர் ஆவணத்தின் அசலோ, சான்றிட்ட நகலோ தாக்கல் செய்யப்படாததாலும், அதிகார முகவர் ஆவணத்தின் அசல் என்ன ஆனது என்பது பற்றிய எந்த விளக்கமும் இல்லாத நிலையிலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள

உரிமையியல் சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் விதி 2-ன் கீழான இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இல்லை என இந்நீதிமன்றம் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என தீர்மானிக்கிறது.

இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்து, பிழை நீக்கம் செய்து இன்று 2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/xxxxxxx
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u>** -

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்: -</u>**

இல்லை.

Sd/xxxxxxx
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.